# யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

## முதலாம் தவணைப்பரீட்சை – 2019

| தரம் – 07 | செயன்முறைத் தொழினுட்பத்திறன் | நேரம் : 2 மணித்தியாலம் |
|---|---|---|

**சுட்டெண் :** ....................................................



### பகுதி I

1) தண்டுத்துண்டங்களில் இருந்து நாற்றுக்களைப் பெறப்படும் தாவரம்.
   1. வற்றாளை 2. வெங்காயம் 3. கரட் 4. பீற்றூட்

2) கேக் கலவையைத் தயார்செய்வதற்கு அல்லது அமிலம் சேர்ந்த மூலப்பொருட்களைக் கலப்பதற்கு பொருத்தமான உபகரணம்.
   1. உலோகக்கரண்டி 2. சில்வர் கரண்டி
   3. ஒட்டாத கரண்டி 4. மரக் கரண்டி

3) மண்ணரிப்பை குறைக்கும் உயிரற்ற தடை.
   1. கிளிரிசீடியா வேலி அமைத்தல்
   2. கல்வேலி அமைத்தல்
   3. பூசணி, வெள்ளரி போன்ற கொடிவகைகளை நடல்
   4. பொன்னாங்காணி, வல்லாரை போன்ற தாவரங்களை நடுதல்.

4) சிதைவடையாத கழிவுப் பொருட்களை முகாமை செய்யும் எண்ணக்கரு.
   1. 2 T எண்ணக்கரு 2. S. L. S எண்ணக்கரு
   3. 3 R எண்ணக்கரு 4. உயிர்வாயு தயாரித்தல்

5) இலத்திரனியல் கூறான மின்குமிழின் குறியீடு.
   1. 
   
   2. 
   3. 
   4. 

6) பாதுகாப்பான முறையில் கொடுக்கல் வாங்கலுக்காக பயன்படுத்தும் சாதனம்.
   1. இலத்திரனியல் அட்டை 2. வெளிநாட்டு நாணயம்
   3. பணம் 4. தங்கம்

7) கணனி மென்பொருளைப் பயன்படுத்தி எளிமையான சுற்றினை உருவாக்க உதவும் மென்பொருள்.
   1. M. S word 2. V – lab Electricity 3. Auto Cap 4. NIE. IK

8) மின் தற்காலிகமாக களஞ்சியப்படுத்தி வைக்கப்படுவது,
   1. மின்மோட்டர் 2. ஆளி 3. கொள்ளளவி 4. ஒளிகாலும் இருவாயி

9) வெட்டிய மூலப் பொருட்களை நீரிலோ அல்லது தேங்காய்ப் பாலிலோ அமிழ்த்துதல்.
   1. களஞ்சியப்படுத்தும் முறை 2. சுவையூட்டும் முறை
   3. பிற்பரிகரிப்பு முறை 4. முற்பரிகரிப்பு முறை

10) இருவழி ஆளி பயன்படுத்தப்படும் சந்தர்ப்பம்.
   1. மோட்டார் வாகன சமிக்ஞை விளக்குகளைக் கட்டுப்படுத்த.
   2. வீட்டு மின் மணியில்
   3. குளிர்சாதனப் பெட்டியில்
   4. வாகன ஒலி எழுப்புதல்.




kalvi.lk

11) தேங்காய்ப்பால், தேநீர் போன்றவற்றை வடித்தல்.
   1. அரிதட்டு  2. கொலண்டர்  3. வடிகட்டி  4. பழச்சாறு பிழியும் கருவி

12) தடையிகளின் தடைப்பெறுமானம் கணிக்கப்படும் அளவீட்டின் அலகு.
   1. அம்பியர் (A)  2. ஓம் (Ω)  3. வோல்ற் (V)  4. வற் (W)

13) இலங்கையின் தரக்கட்டளைப் பணியகத்தின் மூலம் தரமான பொருளுக்கு வழங்கப்படும் அடையாளம்.
   1. ISO  2. SLS  3. ISI  4. SLPS

14) தரையலங்கரிப்புத் திட்டப்படத்தில் கேத்திரகணித நியமக்குறியீடு குறிப்பிடுவது,



   1. பூங்காவனக் குடை  2. இருக்கை
   3. வில்வளைவு  4. தடாகம்

15) நாம் சாதாரணமாக வீட்டில் பயன்படுத்தப்படும் உலர்மின்கலம் எத்தனை "V" ஐக் கொண்டவை.
   1. 2 V  2. 1 V  3. 1.5 V  4. 2.5 V

16) மின்சுற்றைத் தயாரித்த பின்னர், மின்னை வழங்க பயன்படும் துணைக்கருவி.
   1. நீக்கல் பாங்கு  2. ஆளிப்பாங்கு
   3. கட்டுப்பாட்டுப் பலகை  4. சுழலச் செய்யும் பாங்கு

17) வீட்டுக் கழிவை அகற்ற மிகச்சிறந்த முறையாகக் குறிப்பிடக் கூடியது.
   1. புதைத்தல்  2. எரியூட்டுதல்
   3. றோட்டில் போடுதல்  4. கூட்டுப் பசளை தயாரித்தல்

18) சாடிகள், நாற்றுச் சாடியின் அடியில் துளையிடுவதன் பிரதான நோக்கம்.
   1. நாற்றுச்சாடிக்கு வளி கிடைக்க.
   2. மேலதிக நீர் வழிந்தோட வேண்டும் என்பதற்காக
   3. பயன்தரு உயிர்கள் சாடிக்குள் உட்பிரவேசிக்க.
   4. வேர் வெளியே வரவேண்டும் என்பதற்காக

19) சிதைவடையாத கழிவுப் பொருள்
   1. சருகு  2. பொலித்தீன்  3. தேங்காய்ப்பூ  4. மரங்களில் இருந்து விழும் இலை

20) ஆரம்ப தொழிநுட்பவியல் செயற்பாட்டில் நாம் செய்முறையில் ஈடுபட முன்னர் அனைவரும் முதலில் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டியது.
   1. நேரத்துடன் செய்முறைக்குச் செல்லல்.
   2. செயன்முறைக்கான பொருட்கள் யாவும் சரியாக உள்ளதா
   3. வேண்டிய பொருட்கள் அனைத்தும் தரமானதா
   4. அனைவரது பாதுகாப்பினையும் உறுதிப்படுத்தல்.

(1x20 = 20 புள்ளிகள்)



kalvi.lk

## பகுதி II

❖ **முதலாம் வினாவிற்கும் ஏனைய இரு வினாவிற்குமாக மொத்தம் மூன்று வினாக்களுக்கு விடை தருக.**

**01.** 1) தரம் 7 இல் முதலாம் தவணையில் செயன்முறைத் தொழிநுட்பத்திறன்கள் பாடத்தில் செய்த செய்முறை என்ன?
2) இச்செயற்பாட்டிற்கு பயன்படுத்திய பொருட்கள் எவை?
3) நீங்கள் செய்த செயற்பாட்டினால் கிடைக்கும் நன்மைகளைக் குறிப்பிடுக?
4) இச் செயற்பாட்டில் ஏற்பட்ட இடர் / பிரச்சினைகள் எவை?
5) செய்முறை செயற்பாடு வெற்றிகரமாக செய்தபின்பு உங்கள் மனதில் தோன்றியதைக் குறிப்பிடுக. (2+2+2+2+2=10 புள்ளிகள்)

**02.** 1) மண்ணரிப்பு என்றால் என்ன?
2) சிதைவடையாத கழிவுப் பொருட்கள் 2 தருக?
3) மண்ணரிப்பைத் தடுக்கும் உயிரற்ற தடைகளுக்கு உ+ம் 3 தருக?
4) பயிர்களுக்கு கூட்டெரு இடுவதன் மூலம் ஏற்படும் நன்மைகள் 3 தருக.

(2+2+3+3=10 புள்ளிகள்)

**03.** 1) சமையலையில் ஆரோக்கியமான உணவுகளைத் தயாரிக்கும் பொழுது, கவனம் செலுத்த வேண்டிய இரு விடயங்களைக் குறிப்பிடுக?
2) சமையலறையில் காணப்படும் மின்வலுவால் இயக்கும் உபகரணங்கள் 2 இனைக் குறிப்பிடுக.
3) உணவு தயாரிப்பவர் சமையலறையில் பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் 3 இனைக் குறிப்பிடுக.
4) வெட்டுப்பலகை பயன்படுத்தும் சந்தர்ப்பங்கள் 3 இனைக் குறிப்பிடுக.

(2+2+3+3=10 புள்ளிகள்)

**04.** 1) இலத்திரனியல் துணைக்கூறுகள் 2 இனைக் குறிப்பிட்டு, அவற்றின் குறியீடுகளையும் தருக?
2) இருமுனைவு இருவழி ஆளி பயன்படுத்தப்படும் சந்தர்ப்பத்தினைக் குறிப்பிடுக.
3) கட்டுப்பாட்டுப் பலகை, சுழலச் செய்யம் பாங்கு என்பவற்றின் செயற்பாடுகளைத் தருக.
4) எளிய மின்சுற்று ஒன்றினை வரைந்து, அதற்குத் தேவையான பொருட்களையும் குறிப்பிடுக.

(2+2+3+3=10 புள்ளிகள்)



kalvi.lk

தரம் 01 - 10

# 3ம் தவணை

**REVISION | PAPER DISCUSSION**

## ஆரம்பம் - 01.12.2024

மீட்டல் மற்றும் வினாத்தாள்
கலந்துரையாடல் வகுப்புகள்

இலங்கையின் எப்பாகத்திலிருந்தும்
இணைந்து கொள்ள முடியும்.

JOIN NOW

புதிய அனுமதிகள்
வழங்கப்படுகின்றன..

## கட்டண விபரங்கள்

தமிழ் Medium

| | |
|---|---|
| தரம் 01-02 | 2000/= |
| தரம் 03-05 | 2500/= |
| தரம் 06-10 | 3000/= |

English Medium

| | |
|---|---|
| தரம் 06-07 | 3500/= |

Education கல்வி அධ්‍යාපන

KALVI.LK

WHATSAPP
075 287 1457